உ

# மனிதன் தெய்வீகப் பண்பு நிலை அடைய வேண்டுமானால்

## ஞானம் வளர்த்த தமிழ்மொழி வளர உள்ளத்தை நெறிப்படுத்துவோம்

*விநாயகர் தருமநிதிய நிறுவனரின்*
*சிந்தனைத் தொகுப்புகள்*

*இலவச வெளியீடு: இல. உ.O. 20*


**விநாயகர் தரும நிதியம்**

*புலோலி மேற்கு, பருத்தித்துறை.*

**06—10—1991**

# விநாயகர் தரும நிதியம்

புலோலி மேற்கு, பருத்தித்துறை

''ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன்
ஞானகுரு வாணிபதம் நாடு''

மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்துஞ்சார்
எவரெவர் தீமையும் மேற்கொள்ளார் — செவ்வி
அருமையும் பாரார் அவமதிப்பும் கொள்ளார்
கருமமே கண்ணாயினார். (கருமம் - கடமை)

| வடசொல் — தமிழ்ச்சொல் | | வடசொல் — தமிழ்ச்சொல் | |
|---|---|---|---|
| நகல் | — பிரதி | உக்கிரமான | — கடுமையான |
| அந்தஸ்து | — நிலை | உபசாரம் | — முகமன் கூறல் |
| பரீட்சை | — தேர்வு | கலாரசனை | — கலைச்சுவை |
| வருடம் | — ஆண்டு | இனாம் | — அன்பளிப்பு |
| அவஸ்தை | — துன்பம் | தயார் | — முன்ஏற்பாடு |
| சாஸ்திரம் | — கலை | தராசு | — நிறுவை மானி |
| அதிவாரம் | — அடிப்படை | கரகோஷம் | — கையொலி |
| குரூரம் | — கொடுமை | கர்ச்சனை | — முழக்கம் |
| சகசம் | — இயற்கை | கர்வம் | — செருக்கு |
| சகாயம் | — உதவி | கலசம் | — குடம் |

உங்களை இருகரம் கூப்பி வேண்டுகிறோம்!

இந்நூல் தங்கள் கையில் கிடைத்ததும் குறைந்தது மூன்றுமுறை வாசியுங்கள் உங்களுக்கு இதில் புலன்செல்ல வாய்ப்பு இல்லாது போகில் கூடிய விரைவில் உங்கள் சிநேகிதரிடம் இந்நூலை கையளியுங்கள். இன்னும் வாசிக்க வேண்டிய மனஎண்ணம் ஏற்படின் ஒன்பது முறை வாசித்த பின் அடுத்தவரிடம் ஒப்படையுங்கள். தங்கள் உதவிக்கு நன்றி.

புலோலி மேற்கு, நிறுவனர்
01-10-1991. விநாயகர் தரும நிதியம்

உ

விநாயகர் தரும நிதியம்,
வியாபாரிமூலை,
பருத்தித்துறை.

இத்தாபனம் 1990 ஜூலை மாதம் 2ந் திகதி பிரசித்த நொத்தாரிஸ் பருத்தித்துறை ச. ரவீந்திரன் அவர்களால் நிறைவேற்றப் பெற்ற 84ம் இலக்க தரும சாதனம் மூலம் நடைமுறைப் படுத்தப் பெறுகின்றது.

இச்சாதனத்தின் குறிக்கப்பெற்ற முக்கிய விபரங்கள்:-

இத்தாபனத்தின் தொழிலகத்திலிருந்து கிடைக்கப் பெறும் வருமானங்கள் முழுவதும் இப்பகுதி மக்களின் கல்வி, கலை, கலாச்சார வளர்ச்சிக்கும், தமிழ் நூல்களை வெளியிடுவதற்கும் வசதி குறைந்த சிறுவர், முதியோர் ஊனமுற்றோருக்கான உதவிகளைச் செய்வதற்கும் பயன்படுத்தப் பெறல் வேண்டும்.

நியமிக்கப்பெற்ற தருமகர்த்தாக்கள் இத்தாபனத்தின் தொழிலகத்தை பேணிக்காத்து தருமமுறையில் நடத்தப் பெறவேண்டும்.

அவ்விதம் நடத்த முடியாத ஒரு சூழ்நிலை ஏற்படின் தொழிலகத்தை விற்று வரும் பணத்தையும் முதலீட்டுப் பணத்தையும் வங்கியில் சேமிப்புக்கணக்கில் இட்டு அதனால் கிடைக்கும் வருமானத்தை மட்டும் கொண்டு இப்பணி நடைமுறைப் படுத்தப் பெறல் வேண்டும்.

அவ்விதமும் நடத்தமுடியாத ஒரு சூழ்நிலை ஏற்படின் இத்தாபனத்தின் சகல சொத்துக்கள், பணங்களையும் செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஒப்படைத்துவிடல் வேண்டும்.

இத்தாபன ஸ்தாபகரின் மரணத்தின் பின் அவரது உடல் யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்திற்கு ஒப்படைக்கப்பெறல் வேண்டும்.

இத்தாபன ஸ்தாபகரின் கடைசி வேண்டுகோள்:-

அவரது இ..திக்கிரியைகளில் செய்நன்றி மறந்தவர்களான அவரது மனைவி அருள்லட்சுமியும் மகன் விக்கினேசுவரனும் மகள் நிர்மலாதேவியும், அவரது கணவர் க. ஈஸ்வரபாதமும், 2ம் மகள் இராசேஸ்வரியும் அவரது கணவர் ந. வடிவேல்முருகனும் கலந்து கொள்ள எக்காரணம் கொண்டும் இத்தாபனத்தின் தருமகர்த்தாக்கள் அனுமதிக்கக்கூடாது.

இவர்களின் சந்ததியினர் இத்தாபனத்தின் உறுப்பினர்களாக எக்காலமும் எக்காரணம் கொண்டும் இடம்பெறக் கூடாது.

வியாபாரிமூலை,
17-10-1990.

நிறுவனர்
விநாயகர் தரும நிதியம்

N.A

# சமர்ப்பணம்

இம் மாநிலம் உருவாகி அதில் உயிரினங்கள் உருவாக தனது சக்தியை எந்நேரமும் உதவிக் கொண்டிருக்கும் உண்மைப் பொருளான சூரிய பகவானுக்கும் (சிவம் அல்லது மெய்ப்பொருள் அல்லது இறைவன்) பூமியை மட்டும் வலம் வந்து குளிர் சக்தியை நல்கிக் கொண்டிருக்கும் சக்திப் பொருளான சந்திர பகவானுக்கும், இவைகட்கு உறு துணையாக சதா காலமும் சூரிய பகவானை வலம் வரும் அகப்பொருளான அறிவு, நியாயம், நீதி ஞானம் ஆகிய சக்திகளை ஈந்து கொண்டிருக்கும் குரு. புதன். சனி, செவ்வாய் ஆகிய கிரக பகவான்களுக்கும், புறப் பொருளான கல்வி, ஆசை, தொழில் முதலிய சக்திகளைத் தரும் ராகு. வெள்ளி, கேது பகவான்களுக்கும்:

நாம் உருவாவதற்குரிய அணுவளவான வித்தை ஈந்து எம்மை இந்நிலைக்கு ஆளாக்கிய முதாதையர் வழி தந்தைக்கும்:

அவ்வித்தை கருப்பையில் கட்டி வளர்த்து எமது உடல் உருவாக தமது உடலுழைப்பை நல்கிய அம்மைக்கும்;

தெய்வீகத் தமிழ்மொழியை உருவாக்கி உலகுக்கு அளித்த ஞான மேதாவிகட்கும் அம்மொழி எண்களை தத்துவ சிந்தனையுடன் உருவாக்கி உருவம் அமைத்த முதுபெரும் ஞான மேதாவிகட்கும்;

எமக்கு இவ்வித அகப்பொருள் புறப்பொருள் வளர உதவி செய்து குருவாய் அமைந்த பெரியோர்கட்கும்,

எமது உள்ளம் சரீரம் வளரத் தேவையான உணவுச்சக்தியை அளித்துக் கொண்டிருக்கும் ஓரறிவுள்ள மரம் முதற்கொண்டு ஆறறிவுள்ள மனிதகுலம் வரையான சகல சீவராசிகட்கும்,

எமது உள்ளத்திலுள்ள அறிவுப் பொருளது வணக்கத்தைச் செலுத்தி இவர்கள் பாதாரகமலங்கட்கு இந்நூலைச் சமர்ப்பணம் செய்வதில் பூரண ஆத்ம திருப்தி அடைகிறேம்.

நன்றி.

புலோலி மேற்கு.

நூலாசிரியர்

விநாயகர் கரு... நிலையம்

சிவமயம்

மனிதப் பண்பு நிலையிலிருந்து நாம் தெய்வீகப் பண்பு நிலையை அடைய வேண்டுமானால் எம் வாழ்வு பின்வருமாறு அமைய வேண்டும். எக்காலமும் சமத்துவம், சிக்கனம், உடலுழைப்பு இவற்றிற்கு முதலிடம் கொடுக்க வேண்டும்.

1. நெறி தவறாத வறிய குடும்பத்தில் பிறப்பதே சுதற்பேறாகும். செல் வந்த குடும்பத்திற் பிறப்பவர்கள் செல்லப் பிள்ளைகளாய் வளர்ப்பதால் உடலுழைப்பு, சிக்கனம் தெரியாமல் போய் விடுகிறது.
2. அடுத்து அறநெறி மொழிகளில் பற்றுண்டாதல் வேண்டும்.
3. உடலுழைப்பில் கஷ்டம் தெரியக் கூடாது.
4. தன் காலிலே நிற்கும் விருப்பம் உண்டாகியே தீரும். அடுத்த எவரிட மும் கையேந்தி வாழ்க்கை நடாத்த மனம் இடங் கொடாது.
5. உண்மைக்கு மாறுபாடாய் கோடானு கோடி கொடுப்பினும் நா வளை யக் கூடாது
6. சிக்கனம் (பேராசை தவிர்க்க வேண்டும்) நெறி தவறுதல் ஏற்படக் கூடாது
7. கூடிய வரையில் சமத்துவ நோக்கம் எவ்வழியிலும் பேணப்பட வேண் டும்.
8. இவ்வாறு நடந்து வந்தால் சேவை மனப்பான்மை, உதவும் உள்ளம் உருவாகியே தீரும். ஞானம் உருவாவதற்குரிய பஞ்ச பூதச் சேர்க்கை விகிதாசாரம் ஏற்பட்டு ஞான நிலைக்கு எம்மை இட்டுச் செல்லும்.
9. ஆத்மஞானம் உருவாக எவ்வித இடையூறுமில்லை. தெய்வீகப் பண்பு நிலையில் உயர்நிலை அடைந்து ஆத்மா இறை சக்தியை அடைவது உண் மையில் உண்மையே.

ஆடம்பர வாழ்வு வாழ ஆசைப்படுபவர்கள் அசுரப்பண்பு நிலைக்கு வீழ்ச்சியடைதல் தவிர்க்க முடியாது. இவர்களின் பஞ்சபூதச் சேர்க்கை விகிதாசாரம் கீழ்நிலைக்கு மாறுபட்டு வீழ்ச்சிக்கு வழிகோலுகிறது.

இனப்பாகுபாடு, பிறரை அடக்கி ஆழும் அவா, ஆடம்பர வாழ்வு இவை அசுரப்பண்பு நிலைக்கு எம்மை இட்டுச் செல்கின்றன. முதலில் பொறுமைக்குணம் வளர வளர இந்நிலை ஏற்படுகின்றது. (1) பொறுமை காரணமாக (2) கோபம் கூடுகின்றது. (3) பேராசை ஏற்படுகிறது. (4) கர்வம் உண்டாகி (5) அகம்பாவம் வளர்ந்து (6) ஆணவம் பெருகுகிறது. (4) அகந்தை காரணமாக (8) அகங்காரம் கூடியதும் 9) பொய்(இருள்) காரணமாக அசுரப்பண்பு நிலையில் ஆத்மா மிருக மாயும் பறவை வர்க்கமாகவும் மாறுதலடைந்து ஆத்மா கீழ்நிலை அடைவது இயற்கையாகும்.

ஆகவே மனித வாழ்க்கை தெய்வீகப்பண்பு நிலையை அடைவதற் குரிய செயற்பாடுகளை மேற்கொள்வோமாக.

நிறுவனர்
விநாயகர் தரும நிதியம்
புலோலி மேற்கு, பருத்தித்துறை

---

* *மனைவி, மக்கள், பொன், பொருள் இவைகளுக்காக மக்கள் குடம்குடமாய்க் கண்ணீர் சிந்துகின்றார்கள்; ஆனால் ஞானம் வேண்டும்; அருள் வேண்டும்: உண்மை வேண்டும் என்று அழுபவர் யார்?*

* *துருப்பிடிக்கும் பாங்கில் நம் வாழ்வு வீணாகிவிடக் கூடாது!*

* *"மனிதர்களே சிறந்த ஆலயம், அதைவிட்டு கடவுளை வெளியே தேடுவதில் பயனில்லை"*

— விவேகானந்தர்

---

# முன்னுரை

எமது 11-ம் வெளியீட்டை பார்வையிட்ட பலர் அதற்கு முந்திய வெளியீடுகளையும் தங்கட்கு அனுப்ப வேண்டுமென கேட்டுக்கொண்டுள்ளனர். எம்மிடம் அவ்வெளியீடுகள் கைவசம் இல்லாமையால் அவைகளை மறுபதிப்பு செய்து வெளியிடுகிறோம். இவ்வெளியீடுகள் சம்பந்தமாக தனிநபர்கள், பொதுநிறுவனங்கள் தங்கள் கருத்துக்களை எமக்குத் தெரிவிக்கும்படி நன்றியுடன் வேண்டுகிறோம் எமது நிறுவனம் பயன்கருதாப் பணியாக உடல் உழைப்பை நல்கி இவ்வெளியீடுகளை வெளியிடுவதில் பெரும் ஆன்மீக மகிழ்ச்சியடைகிறது. இவ்வெளியீடுகளில் குறிப்பிடப் பெற்றவை எமது எண்ணத்திற்கேற்ப சொந்த வாழ்க்கையில் செயல்படுத்தி அனுபவத்தில் கண்ட உண்மைகளாகும். நாம் சிறுவயதில் ஒருநேர உணவுக்கு கஷ்டமடைந்த நிலையில் உடலுழைப்பால் மூடை சுமந்து சொல்லொணாக் கஷ்டங்களை அனுபவித்தும் உண்மை தவறுவதில்லை கடமையை ஆற்றுவதில் எவ்வித சிரமத்தையும் பொருட்படுத்தாது செயல் பெறறதால் இன்று உண்மைப் பொருளின் ஒளி விளங்குகிறது. எமது பெயரையோ சுகவாழ்வையோ விரும்பாது கடமையினை உணர்ந்து செயல் பெறுகிறோம். எவரும் இதே விதமாக செயல்பெற்றால பொருளைத்தேடி அலைய வேண்டியதில்லை. எமது சொந்த வாழ்க்கை வரலாற்றை எழுதும் போது இவ் அனுபவத்தின் உண்மை தெரியவரும். எமது வாழ்க்கையில் இலவசச் சாமான்களை என்றும் வாங்கியது கிடையாது. எமது நிறுவன ஆலை இராணுவ நடவடிக்கையின் போது உடைக்கப்பெற்றும் நாம் எவரிடமும் நஷ்டம் கேட்டதில்லை. எமது கையால் உழையாத பணம் எமக்குத் தேவையில்லை. ஆன்மா ஞானஒளியில நற்கதி அடைவதே எமது குறிக்கோளாகும். நன்றி.

புலோலி மேற்கு,
01-01-1991.

நிறுவனர்
விநாயகர் தரும நிதியம்

# மனிதப் பண்பு நிலை அசுரப் பண்பு நிலையாக வீழ்ச்சியடையும் முறை

| எண் | அக உணர்ச்சி | வாழ்க்கை முறை | சைவ சமய புராண அறிவுரை | முக்கிய காரணங்கள் |
|---|---|---|---|---|
| I | பொறுமை | சோம்பல், தாமதம் | பிரமா, மால், தண்டம் அடைந்தமை | ஆடம்பர வாழ்வு இனப் பாகுபாடு பிறரை அடக்கி ஆளும் அவா |
| II | கோபம் | நித்திரை மறதி | விசுவாமித்திரர் தவம்கெடுதல் | |
| III | பேராசை | பகட்டு வாழ்க்கை | மார்க்கோஸ் நாடு இழந்தமை | |
| IV | கர்வம் | சுயமாகச் செயல் புரியாமை | இராவணன் அழிந்தமை | |
| V | அகம்பாவம் | மற்றவர்களை அடிமையாக்கல் | தக்கன் வீரபத்திரரால் தண்டம் அடைந்தமை | |
| VI | ஆணவம் | புறவாழ்வில் பெருவிருப்பம் | சூரன் முருகனால் அழிக்கப் பெற்றமை | |
| VII | அகந்தை | வன்செயலில் விருப்பம் | தேவர்கள் வயிரவரால் தண்டம் அடைந்தமை | |
| VIII | அகங்காரம் | வன்செயலில் விருத்தம் | ஹிட்லர்; முசோலினி வீழ்ச்சி | |
| IX | பொய் | அகங்கார வாழ்வு | பிரமாவுக்கு தேவாலயம் இல்லாமை | |

# வாழ்க்கை முறை

உயர் உணர்வு, இயல்பை மாற்றுதல், ஆன்மீக சம்பத்துக்கள் என்றெல்லாம் பேசுகிறோம். நாம் பேசும் உளவியல் மாற்றத்திற்குக் கூட ஏதோ ஒருவகைப் புற ஆதாரம் தேவைப்படுகிறது. மனிதன் பிராணிகள் விசயத்தில் எவ்வளவு நல்லுணர்ச்சியும் கவனமும் காட்டி பழகுகிறோமோ, அதே கவனமும் நல்லுணர்ச்சியும் பொருள்களைக் கையாளும் போதும் காட்டவேண்டும். இவ்வாறு செய்வது எமது சொந்த வளர்ச்சிக்கு உதவும். இவை எல்லாம் இறைவன் [உண்மை] இருப்பிடம் என்ற உணர்வில் வாழவேண்டும். எல்லாப் பொருள்களையும் முழு அளவிற்கு பயன்படுத்த வேண்டும். சிக்கன வாழ்க்கையாக எதையும் வீணாக்கவோ கெட்டுப்போக விடவோ கூடாது. கொடுப்போம் அன்போடு கொடுப்போம். நாம் பிறருக்குக் கொடுக்கும் ஒவ்வொரு கொடையும் எமது உணர்வையும் நல்லெண்ணத்தையும் தாங்கிச் செல்லட்டும். ''சரீரம் தருமசாதனம்'' என்னும் மூதுரையை நினைவில் வைத்திருக்க வேண்டும். நாம் உண்ணும் சில உணவின் தன்மை எமது மனப்பான்மையைப் பாதிக்கிறது என்பது உண்மையேயாயினும் எமது மனப்பான்மையைப் பாதிப்பவை வேறு பல உண்டு என்பதும் உண்மையாகும். மேலும் எம்முடைய இச்சாசக்தியின் மூலம் அதிக அளவு எம்மனப்பான்மையினை மாற்றமுடியும் எமது உடலுக்கு இன்றியமையாத இந்த உணவை எமக்குக் கிடைத்திட எத்தனையோ பேர் உழைத்திருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம். எமது இயல்பை கபடமின்றி தூய்மைசெய்ய கருமத்தை ஒரு சாதனமாகக் கொள்ளலாம். எல்லாச் செயல்களிலும் ஒருவகைச் சக்தி வெளிப்படும். அது மனச்செயலாக, உள்ள எழுச்சியாக, பிராண இயக்கமாக, உடல் தொழிலாக இருக்கலாம். இப்பிரபஞ்சத்தில் செயலே இயற்கையின் தருமம். கடவுளால் விதிக்கப்பட்டதை மனிதனால் மீறவே முடியாது. எமக்கென்றும் ஒரு வேலை [கருமம்] இருக்கும். வாழ்க்கையின் இந்த அம்சத்தை இறைஉணர்வை நோக்கிச் செல்லும் அர்த்தமுள்ள ஒரு இயக்கமாக மாற்ற நாம் கற்றுக்கொள்ள வேண்டும்.

இவ்வாறு செயலின் அடிப்படையை முற்றிலும் ஆசை நோக்கமாக இருப்பதிலிருந்து மாற்றி இறைபக்திக்கு வாய்க்காலாகவும், இறை [உண்மை] தொண்டாகவும் ஆக்கும்போது எமது நேர்மை [உண்மை]க்கு தக்கபடி எமது செயலின் தன்மை மாறுகிறது. வேலையில் தன்மை உயர்கிறது.

வேலையை இறை அர்ப்பணமாகச் செய்யும்போது அதில் ஒரு உவகை பொங்குகிறது. கடனுக்காகச் செய்யும் வேலையில் அந்த உவகை சிறிதும் இருப்பதில்லை. எமது சக்தி இறைவனை நோக்கி பாயும்போது நாம் மகிழ்ச்சியில் திளைக்கிறோம். எமது செயலின் பயனைத் தியாகம் செய்கிறோம். செயல்களின் விளைவை இறைவனுக்கு அர்ப்பணித்துவிட்டு எவ்வித பயன் ஏற்பட்டாலும் அவற்றை மனஅமைதியுடன் ஏற்றுக் கொள்ளுகிறோம். முதலில் செயல்களின் பயன்களைத் தியாகம் செய்யக் கற்றுக் கொள்ளுகிறோம். உயர்ந்தவேலை தாழ்ந்தவேலை என்ற வேறுபாட்டை நோக்கமாட்டோம். எமது கைக்கு வரும் வேலை எதுவானாலும் இறைவனால் வந்ததாகக் கருதி எவ்வளவு முடியுமோ அவ்வளவு செய்து முடிப்போம்.

இதையடுத்து எம்மிடம் ஒரு மாற்றம் ஏற்படலாம். எமது செயல் அளவிற்கு ஆசை, அகங்காரம் நீங்கிய அளவு புதிய ஊக்கம், ஒரு உயர்சக்தி பாய்வதை உணரமுடியும். எமது அக மாற்றம் புறச்செயல்களில் வெளிப்பட வேண்டும். அஞ்ஞான சக்திகளும் பொய்மையின் சக்திகளும் யாரையும் தங்கள் பிடியிலிருந்து தப்பிச்செல்ல அனுமதிக்காது. ஆகவே கிண்டல் செய்வார்கள் ஏமாற்றுக்காரன் என நகைப்பார்கள். பலவிதத்தில் ஏளனம் செய்வார்கள், என்ன செய்தாலும் நாம் எம்வழிகளை மாற்றிக்கொள்ளக் கூடாது.

எதிர்மறை இயக்கங்கள் போயிவிடும் எம்மைச் சுற்றியுள்ளவை மாறிவிடும். நாம் இறைவனுக்காக செயல் புரிகிறோம். அவனது செயலுக்கான தொண்டு புரிகிறோம். எமது செயல்கள் அறிவிலிகள் கூட்டத்திடம் பாராட்டு பெறுவதற்கல்ல. குருடர்கள் அரைக்குருடர்கள் மத்தியில் முதலாவது ஆளாக இருப்ப

தற்கல்ல. இவ்வாறு நாம்செய்யும் கருமம் (வேலை) எமது ஆன்மீக வாழ்வில் ஒருங்கிணைந்த பாகமாகிவிடும். எம்மால் முடிந்த வரை எமது கருமத்தைச் செம்மையாகச் செய்துவிட்டு மிகுதியை இறைவன் சித்தத்திற்கு விட்டுவிட வேண்டும். எமது செயல்கள் இறைசெயல்களுடன் இசைந்துபோக நாம் கற்க வேண்டும். எமது விருப்பு வெறுப்பை இறைசக்தி மீது சுமத்த நினைக்கக்கூடாது.

இதுவே கருமயோகத்தின் சாரம் கருமயோகம் நாம் மேற்கொண்ட சாதனைகளில் பிரிக்கமுடியாத ஒரு பாகம் ஆகும்

நமது முயற்சியின் நோக்கமயம் நமது இயல்பைத் தெய்வத் தன்மை அடையச் செய்தலாகும். நமது மனித இயல்பு படிப்படியாக மாறி கடைசியில் மாற்றமடைந்து தெய்வ இயல்பாக மாறுதற்கான முறை பின்பற்றப் பெறவேண்டும்.

நாம் எப்போதும் விழிப்புடனிருந்து உயர்ந்த நோக்கத்திற்கு எதிரானவைகளை விலக்கவும், சித்தியாவதற்கு துணையானவற்றை ஊக்குவிக்கவும் உறுதுணையான முயற்சிசெய்ய வேண்டும் இம்முயற்சி பெரும்பாலும் உள்ளத்தைச் சார்ந்தது.

எம்மிடம் பழைய விலங்கு வாழ்க்கையிலிருந்து விடுபட்ட சில குணங்களும் தெய்வத்தன்மை கொண்ட எதிர்கால வித்துக் குணங்களும் இருக்கும் நாம் அவற்றை ஆக்கரீதியான குணங்கள் எதிரான குணங்கள், நம்மை மனிதநிலைக்கு மேலே செல்லச் செய்யும் குணங்கள் கீழே இழுக்கும் குணங்கள் என்று கூறலாம்.

பெரும்பாலானவை மனம், உயிர், உடல் முழுவதும் பரவி நிற்கும் அகங்காரம், ஆசை இவைகளாகும். அவை நம்மை தங்களுடைய இரும்புப்பிடியில் பிடித்துக் கொண்டுள்ளன நம்மை அநித்தியமான பொருள்களின் பின்னால் ஓடச் செய்கின்றன.

நல்லோரிடமிருந்து நம்மைப் பிரித்துவைத்து சுயநலம்) பேராசை, கோபம், வன்முறை, வெறி முதலிய சுயலாபத் தீவுகளில் எம்மை சிறை வைக்கின்றன. இவற்றை விட்டொழிக்க [உண்மை] நேர்மையுடனும் விடாமுயற்சியுடனும் முயலவேண்டும்.

உதாரணமாக அற்பத்தனத்தைப் போக்க தாராள தன்மையையும், கோபத்தைப் போக்க மன்னிக்கும் சுபாவத்தையும், பகையைப் போக்க அன்பு அல்லது உதாசீனத்தையும் வளர்க்க வேண்டும். கடினமான வழியைப் பின்பற்றி இறைவனை நோக்கிச் செல்வதா? எளிதான வழியைப் பின்பற்றி பஞ்சபூதச் சேர்க்கை விகிதாசாரம் கீழ்நிலைக்குக் குறைவுபட்டு பரிணமப்படியில் கீழே சறுக்கிவந்து விலங்கை நோக்கிச் செல்வதா? என்று தீர்மானிக்க வேண்டும். இறைசக்தியை நாடுகின்றவனிடம் ஒரே குண நிர்ணயம்தான் உண்டு. எவை இறைவனை நோக்கி வளர்வதற்கு உதவுகின்றனவோ அவை நல்லவை. எவை வளர்ச்சியை தாமதப்படுத்துபவையோ அவை தீயவை. (இறைவன் — உண்மை)

ஆகவே எம் அறிவுக்கு எட்டியவரை நேர்மையை (உண்மை) கடைப்பிடிக்க வேண்டும். ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் இறை பக்கமான உயர்ந்த விசயங்களின் பக்கமாக செயல் பெறவும், கீழியல்பின் கவர்ச்சியை உதறித் தள்ளவும் கிடைத்த வாய்ப்பாகக் கருதவேண்டும். சீர்தூக்கிப் பார்க்கும்போது தவறு செய்துவிட்டாலும் பெரிய தீமை ஏற்பட்டுவிடாது.

நமது மூதாதையர் எமக்கு வகுத்துத்தந்த அறநெறிகளில் எமது செயலுக்கு உதவக்கூடிய அறவுரைகள் பல உள்ளன. ஆனால் இவ் அறவுரையின் மேலோட்டைப் பிடித்துக் கொள்ளாமல் சாரத்தைக் கவனிக்க வேண்டும். தயை, அன்பு, தொண்டு, நேர்மை, சிந்தனை சொல் செயல் மூன்றிலும் உண்மை கடைப்பிடித்தல், இவை ஆன்மீகக் குணங்களாகும். இவற்றைப் பழகி அவை வளரும் அளவிற்கு கீழியல்புகளின் அஞ்ஞானம், பொய்மை ஆகிய திரைகள் மெலிவதாகி எம் அந்தராத்மா எமது வாழ்வில் வெளிப்பட்டு விளங்க வழி திறக்கப் பெறும்.

எமக்குள்ளே ஆழத்தில் அந்தராத்மா (ஆன்மா) உள்ளது இது இறைபகுதி, எமது அன்றாடவாழ்வில் ஒவ்வொரு செயலும் இதை மனதில் கொண்டு செயல்பெற வேண்டும் ஆன்மாவின் சுடர் எரியும்வண்ணம் எமது வாழ்க்கையை அமைத்துக் கொண்டாலன்றி உண்மையான ஆன்மீக வாழ்வு உருவாகமுடியாது. நமது செயல்களின் மூலம் பஞ்சபூதச் சேர்க்கை விகிதாசாரம் வித்தியாசமடையாமல் இந்த சைத்திய புருஷனை உணர்வதற்குரிய செயல் நடைபெறவேண்டும். எமது விருப்பு வெறுப்பு தலையிடாதிருக்க வேண்டும். (சைத்தியபுருஷன் — ஆன்மவிதை)

சூக்கும ரூபமான அகங்காரத்திலிருந்தும் தந்திரமான பிராணனிலிருந்தும் பொய்யான வழிகாட்டுதல் பரவலாம். அவை ஆன்ம முன்னேற்றத்துக்கு தடையாகும். எம்மை ஏமாற்றிக் கொள்ளும் திறன் எமக்கு மிகவும் அதிகம். ஆகவே நாமாகவே பயன்தரும் அகக் கட்டுப்பாட்டை வகுத்துக் கொள்ள வேண்டும். ஒளிவு மறைவின்மை, வாய்மை, தாழ்மை, நாணயம் இவைகள் ஆன்ம முன்னேற்ற வழிகளாகும். இவற்றால் பஞ்சபூதச்சேர்க்கை இவற்றிற்குரிய விகிதாசாரமாய் மாறுபாடடைகிறது இவை நித்தியமான உண்மைக்கு (இறைவன்) எம்மைக் கொண்டு செல்கின்றன. இவை எக்காலத்துக்கும் பொருத்தமானவை.

நாம் செய்தது சரியில்லை என்று தெரிந்தால் அதைத் திருத்திக்கொள்ள வேண்டும் என உறுதி பூணவேண்டும். தவறு செய்துவிட்டால் அதை உணர்ந்து அதற்காக வருந்தி இனிமேல் அத்தவறைச் செய்யக்கூடாது என உறுதிசெய்து கொண்டால் போதும். சொல் மூலமாகவோ வேறு வழிகளிலோ எம்மிடம் பலர் சந்தேகத்தை உண்டாக்கி நிம்மதியைக் குலைப்பார்கள். விழிப்புடனிருந்து இப்படியானவர்களது நட்பை தவிர்க்க

வேண்டும். எமது பிராணசக்தியை சிதறடித்து விடுவார்கள். இவர்களிடமிருந்து நாம் விலகியே இருக்கவேண்டும். அவர்களுடன் பொதுப்படையான உறவு மட்டும்தான் இருக்கலாம்'

இந்தக் காலத்தில் சாதுக்கள் மகாத்மாக்கள் எங்கு இருக்கிறார்கள் என்று தேடிக் கண்டுபிடிப்பது சாத்தியமில்லை. அப்படிப்பட்ட மகான்கள் அதிகம் பேர் இல்லை என்பது உண்மை. இறைவனை அடைந்த மகான்களின் நூல்கள் பல உள்ளன. அவர்களது ஆன்மசக்தி ஒவ்வொரு சொல்லிலும் இருக்கின்றன. அதைப் படிக்க சிறிது நேரத்தை ஒதுக்குவது நன்று. எமக்கு வேண்டியது அனுபவம், வெறும் தத்துவ அறிவு அன்று. படித்துப் புரிந்து கொண்டால் மட்டும் போதாது என்பது உண்மை. படித்ததைச் செயலாக்க வேண்டும். வாழ்க்கையில் இவற்றைக் கொண்டுவர வேண்டும். சிந்தனை, உணர்ச்சிகள் அதன் அடிப்படையில் எழவேண்டும்.

புறவாழ்வில் நாம் நினைப்பவை, உணர்பவை, செய்பவை எல்லாம் அகவாழ்வில் விளைவுகளை உண்டுபண்ணும். அவை தடங்கலை, துன்பங்களை ஏற்படுத்தும். எமது அன்றுடவேலை நாம் உள்ளே செய்யும் வேலையுடன் தொடர்புடையது என நாம் கருதவேண்டும். இந்தவகையில் எம் அகமுன்னேற்றம் புறவாழ்க்கையைப் பொறுத்ததாக இருக்கும். ஆகவே ஆன்மீக உணர்வின் வளர்ச்சிக்கு தடையாயுள்ள அம்சங்களை நீக்கவேண்டும். கவனமாக இருந்து அகங்காரத்தால் ஆட்டிவைக்கப் பெறுமல் இருந்தால் போதுமானது. ''ஆன்மீக அகங்காரம்'' என்னும் வடிவம் தோன்றக் கூடும்.

பலர் உயர்ந்த ஆன்மீக நோக்கத்தோடு தொடங்கி தாங்கள் அலாதியானவர்கள் என்ற எண்ணத்திற்கு இடம்கொடுத்து ஆன்

மீகத் தற்கொலை செய்கிறார்கள். இந்த ஆபத்திலிருந்து எம்மைக் காத்துக்கொள்ள சிறந்தவழி பணிவுடைமையே.

இவ்வுலகில் இறை வெளிப்பாடு பலபடியாக நடைபெறுகிறது என்னும் உண்மையை மனதில் கொள்ளவேண்டும். ஒவ்வொரு மனிதனும் பஞ்சபூதச் சேர்க்கை அணுவளவு வித்தியாசமான கணக்கில் உருவாகியுள்ளான். ஆகவே எமக்குச் சரியாகத் தோன்றுவது இன்னொருவருக்குத் தவறாகத் தோன்றலாம். இந்த விசயங்களில் மேல் கீழ், உயர்வு தாழ்வு, என்கிற பேச்சுக்கு இடமில்லை.

ஒவ்வொரு செயலிலும் உள்ள உண்மையை அல்லது உண்மை அம்சத்தைக் காணக்கூடிய திறந்த மனப்பான்மையை நாம் பெறமுடியும். பரிணாம வளர்ச்சி அடையும் உலகில் மனதினால் உருவாக்கிய எந்த ஞானமும் முடிந்த முடிபாக இருக்க முடியாது மனித மனமே வளர்ந்து கொண்டிருக்கும் ஒன்று. படைப்புகளும் மனவளர்ச்சிக்கேற்ப மாறிக் கொண்டேயிருக்கும். மனம் கிரகித்துக் கொள்ளும் அளவிற்கு ஏற்றபடியே உண்மை வெளிப்படுத்தப் பெறும். அறிவு வளர்ந்து அதன் எல்லை விரிகின்றது. ஆனாலும் இறுதி உண்மையை மனத்தினால் அறியமுடியாது.

ஆன்மீகம் என்பது ஆன்மாவின் மகிழ்ச்சி அம்சத்தைக் கண்டு விசால இருதயம் கொண்டவர்களாக இருக்கக் கற்றுக் கொள்வதேயாகும்.

எம்மைச் சுற்றியுள்ளவர்களுடன் கருமம் வைத்துக் கொள்ள வேண்டியுள்ளது. எமது சொந்த இலாபத்தின் அடிப்படையில் அணுகும் போக்கை நாம் கைவிடவேண்டும்.

உயர்ந்த இலட்சியங்களை உணர்ந்து அவைக்கு ஏற்ப வாழ முயல்பவருடன் நட்புக்கொள்ள வேண்டும். பிறருடைய துன்பம் அற்பமானது என நாம் நினைக்கக்கூடாது. எம்மைச் சுற்றிலும் உள்ளவர்களுக்கு எம்மால் இயன்ற உதவியைச் செய்ய வேண்டும். பற்றற்ற அமைதி, பற்றற்ற அன்பு இவற்றை வளர்த்துக் கொண்டோமானால் எம் உதவி நல்ல பயனைத் தரலாம்.

பொய்மையும் அஞ்ஞானமும் நிறைந்த உலகில் இன்றைய நிலையில் தீயநோக்கமுடையோர் பலர் இருக்கலாம். அவர்கள் எம்மீது கல்லைப் போட்டால் பதில் செய்யாமல் இருப்பது நன்று. எம்சக்திகளை வீணாக்காமல் அவர்கள் சொல்லை உதாசீனம் செய்துவிடுவது நன்று.

அடக்குமுறைகள் கூடாது, மனதைச் சுதந்திரமாக இயங்க விடவேண்டும் என்பன போன்ற வார்த்தைகளை நம்பவேண்டாம். அடக்குமுறை எனக் கண்டனம் செய்பவற்றுள் பல நூற்றாண்டுகால அறநெறியிலும் ஆன்மீக செயல்களிலும் இருந்து பிறந்தவை அவை.

மனிதனை மனிதனுக்கி எம்முடைய இயல்பை இறைவனை நோக்கித் திரும்பப் பக்குவப்படுத்துகின்றன.

இந்தப் பிறவியைவிட்டு மேலே போகிறதிற்கு முயற்சிக்கும் தனிப்பட்டவர்கள் எங்கிருக்கிறார்கள் என்று பகை அசுரர்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். உண்மையை நாடுகிறவர்களை தவறான வழியில் போகச்செய்து தங்கள் வலையில் சிக்கவைக்க முயலுகின்றனர். ஆகவே நாம் எப்போதும் விழிப்புடன் இருக்க வேண்டும். மீண்டும் மீண்டும் எம்மைச் சோதித்துப் பார்த்துக் கொள்ள வேண்டும். எமது ஆர்வத்தை அதிக உண்மையுள்ள

தாக செய்து கொள்ள வேண்டும். இறைவனை இறைவனுக்காக நாடவேண்டும் உண்மை காப்பாற்றும். சில ஆன்மீக உண்மை கள் எமக்கு வெளிப்படலாம். இதை எவரிடமும் பேசத் தேவை யில்லை. குரு நிலையில் உள்ளவருடன் மட்டும் அவற்றைப் பேச லாம். உலகம் இறைவனின் வெளிப்பாடேயாதலால் நியாயமான உயர்நிலைக்கு எம்மை உயர்த்துவதே எம் கடன். பணத்தை வெறுக்க வேண்டாம். பணம் ஒரு சக்தி. அது பொய்மையின் சக்திகளின் கைகளில் உள்ளது. இறைவனுக்காக நாம் அதை அடைய வேண்டும். இறைவனுடைய சித்தம் நிறைவேறும் வகை யில் அதைச் சரியான வழிகளில் பயன்படுத்த வேண்டும். பதவி யும் அதிகாரமும் சீரழிக்கும் என்று அவற்றிலிருந்து ஓடத்தேவை யில்லை.

எதிலிருந்து எல்லாம் வருகின்றதோ எதனிடத்தில் எல்லாம் வதிகின்றதோ இது இறைசக்தி (உண்மை)

இறைவனிடமிருந்து பெற்ற அருளை அன்போடு நினைவு கூர் தல் இறைவன் எமக்குச் செய்துள்ளவற்றை செய்பவற்றையெல் லாம் தாழ்மையுடன் நினைவு கூர்தல், இறைவனுக்கு எவ்வகை யில் எல்லாம் கடன்பட்டுள்ளோம் என்ற இயல்பான உணர்ச்சி இவற்றின் காரணமாக இறைவன் நமக்கு இவ்வளவெல்லாம் செய்கிறுனே. நாம் சிறிதளவாவது தகுதியுடையவர்களாக இருக்க வேண்டாமா என நினைந்து கூடுமானவரை முயற்சி செய்வது எமது நன்றிக் கடனாகும். வேறு எந்தச் செல்வாக்கையும் ஏற் காது இறைவனது செல்வாக்கு ஒன்றையே ஏற்க வேண்டும். மிக உயர்ந்த உணர்வு, அனுபவம் இவற்றை இறைமட்டத்திற்கு உயர்த்த வேண்டும்.

தன்னையும் தன் உடைமை யாவையும் இறைவனுக்கு கொடுத் தல் இறைவனது சித்தத்திற்கு கீழ்ப்படிதல் அகங்காரத்திற்காக வாழாமல் இறைவனுக்காக வாழ்தல் இவை இறைவனிடம் சர ணடையும் வழிகளாகும்.

# திருக்கோயில் திருவிளக்கம் பொங்குக

நாயன்மார் மூவர் முதலிகள் எமது பொருட்டாக கோயில் தோறும் மூலமூர்த்திகளை வழிபடுவோர்களாய் தம்மை வழக்கப் படுத்திக் கொண்டு தோத்திர மூலம் கோயில் திருவிளக்கத்தை கோயிலில் திகழ வைத்தார்கள். இதனை நாம் நம் சமயப் பெருமையாக அற்புதம் என அழைத்து வீணே காலத்தைக் கழிக்கிறோம் அன்றி அதன் அடிச்சுவடு அணுகும் அறம் செய்ய விரும்புகின்றோமில்லை. என்னே நம் விந்தை வாழ்வு.

''நின் அடி என் மனத்தே வழுவாதிருக்க வரம் தரல் வேண்டும்.''

''நின் அடி'' முதலும் அடியும் காண முடியாத உண்மைப் பொருளின் பாதாரம், எனது மனதில் மாறாதிருக்க வேண்டும் என வேண்டுகிறார். அதாவது உண்மை மாறக்கூடாது. ஆனல் இன்று கோயில்களில் பிரதான வைபவங்களில் தெட்சணை என்று பலமுறை கேட்கிறார்கள். இவை சகலரிடமும் ஒரேமாதிரி அமைவதில்லை. ஆதலால் இம்முறை உண்மைக்கு மாறுபட்டவை ஆதலால் உண்மையே இறைவன் என்பதை உணர முடிவதில்லை.

சகல துறைகளிலும் அரசியல் மேவி நிற்கின்றமையால் உயர்வு தாழ்வு மனப்பான்மைகள் வளர்ந்து வருகின்றன. மேற்கிலிருந்து வந்த நாகரீகம் சிக்கலையும் பிரச்சனைகளையும் உருவாக்கி ஓர் இனம் மறுஇனத்தை அழித்துத் தலைதூக்க முயலும் காட்டுமிராண்டி எண்ணங்கள் வளர்ந்து விட்டன. நமது சமய வரலாறுகள், தலைவர்களின் முதுமொழிகள் யாவற்றையும் மறந்து தந்திரோபாயங்களைப் பயன்படுத்தித் தமது சொந்தச் சகோதரர்களையே அழிக்கத் துணிகிறார்கள். சமயத் தலைவர்கள், ஞானிகள் சிந்தனைகள் புறக்கணிக்கப்பட்டு விட்டன. நாமும்

மேற்கு நாடுகளை நாடி ஓடுகின்றோம். எமது பிரச்சனைகளைத் தீர்த்துக் கொள்ள எமக்கு உறுதியில்லை. நம்மை நாமே அழித்துக் கொள்ள ஏன் ஐயா மேற்கு நோக்கி ஓடவேண்டும்? நமக்குள்ள சிந்தனைப் பலத்தால் ஆன்ம ஞானத்தால் சிக்கல்களை அறுத்து, சகோதரத்துவத்தை உருவாக்க முடியாதா? அப்படியானால் ஞானிகள் அறிஞர்களின் சிந்தனைகள், நூல்கள், மத பீடங்கள், கோயில்கள் எல்லாம் எதற்காக!

யதார்த்தவாதி வெகுஜன விரோதி, முற்றிலும் உண்மை. எவராவது உண்மையினின்றும் வழுவாமல் நடந்து பார்த்தபின் சொல்லுங்கள். உண்மையைப் பேசும் போதே மற்றவர்களின் விரோதத்தைச் சம்பாதித்துக் கொள்ளுகிறார். எவரும் உண்மை பேசுவதால் கூடுதல் இலாபம் பெற முடியாதென்பதால் உண்மைக்கு வருவது கஷ்டம். ஆனால் இலட்சியத்தை எண்ணி ஒரு சிலர் மட்டும் உண்மையை அனுஷ்டிக்க வேண்டுமென விரும்பலாம். அப்படியானோர் மிகமிகக் குறைவு. அவருக்கு வெகுசன விரோதம் சொல்லாமல் கொள்ளாமல் வந்துவிடும். தவறான பொய்யாயின் அவரது செயல்களில், தொழில்களில், கருமங்களில் தருமங்களில் அவரது நோக்கம் புலப்படவே செய்யும்.

55 வயதின் முன் இதற்குரிய சரியான உட்பொருள் உற்பத்தியாக முடியாது. தெய்வப் புலவர்கள் வள்ளுவர், ஒளவையார், நக்கீரர், கம்பர், நாயன்மார்கள் முதலியோர் முதுபருவத்தில்தான் உலகுக்கு வழிகாட்டும் நூல்களையும் நெறிகளையும் வெளியிட்டுள்ளார்களேயன்றி இளமைப் பருவத்தில் அல்ல என்பதை நாம் நன்முக ஆராயவேண்டும். ஆகவே உலக நெறிப்பாடுகள் எல்லாம் அனுபவத்தின் வழிகளாகும். மறுபிறப்பு, சோதிடம், விதிமுறைகள் என்பன ஆரம்ப காலத்தில் அனுபவ வல்லுனர்களாலும் மன சுத்தியுள்ளவர்களாலும் உண்மைவழிப் பெற்றவர்களாலும் வகுக்கப்பெற்றுள்ளன. இவை முழுவதும் உண்மை நெறியாகும்.

தற்காலத்தில் உருவாக்கப்பெறும் அரசாங்கங்கள், கோவில்கள், பொதுப்பணி மன்றங்கள், நீதிஸ்தலங்கள், கல்லூரிகள், சமயப் பணிமனைகள், கிராமாட்சி சபைகள் முதலிய சகலதும் ஒருபக்க சார்பாக (யாப்புகளை) சட்டதிட்டங்களை ஆக்கி அமுல்படுத்தி வருவதால் அவை அடிக்கடி மாற்றமடைந்தும் அழிந்தும் செயல்படமுடியாமலும் இருப்பதை அறிகிறோம். உண்மை நிலை சரியாய் விதிமுறையில் அமைந்திருக்குமாறுல் அவை என்றும் அழியா வரம் பெற்றிருக்கும்.

இந்துக்களின் சாஸ்திரங்களை இயற்றியவர் ரிஷிகள். இவர்களும் தாம் ஆத்மசொரூபம் என்பதை தங்கள் அனுபவத்தில் கண்டார்கள். இக்காலத்திய மனிதருக்கு இந்த அனுபவங்கள் ஒருபோதும் வாய்க்காது என உரிமை கொண்டுள்ளனர். ஆதலால் மதத்தில் நம்பிக்கை வை எனப் புகட்டுகின்றனர். இது அறிவுடைமையல்ல. ஏதோ சிலருக்காவது எதிர்காலத்தில் சிரமத்துடன் அவ்வுண்மையைப் பெற அனுபவத்தில் வாய்க்கலாம். நிகழ்ந்த நிகழ்ச்சி திரும்பத் திரும்ப நடப்பதே இயற்கையின் நியதி. இக்காலத்திய மனிதனும் அதை அனுபூதியில் பெற்றாக வேண்டும். இவைகளைப் பேசிக்கொண்டிருப்பதில் பயனில்லை. அதன் உட்பொருளை அனுபவத்தில் யாவரும் உணரவேண்டும். கடவுளின் பெயரால் குழப்பங்கள், சண்டைகள் இருந்து அக்காரணத்தால் சிந்திய இரத்தத்திற்கு அளவில்லை. அப்படி அவர்கள் கொலை புரிந்த காரணம் மதத்தின் மூலதத்துவத்தை அறியாததேயாகும்.

மெய்ப்பொருள் எது என்னும் நாட்டம் கொண்டவர்களாகவே மக்கள் இருந்து வருகின்றனர். மனிதனின் அடிப்படை (தத்துவங்களை) உண்மைகளை என்று கிரகிக்கிறானே, ஞானக்கண் கொண்டு கண்டறிகிறானே, அத்தத்துவ சொரூபமாக மனித வாழ்க்கை அமைந்திருக்கிறது என்னும் அனுபவத்தைப் பெறுகிறானே அன்றுதான் அவனுடைய ஐயங்கள் அகலுகின்றன. அஞ்

ஞான இருள் நீங்குகிறது. நெடுங்காலம் கையாண்ட கோணலான கொள்கைகளும் கருத்துக்களும், நிமிர்த்தி நேர்மைப்படுத்தப்பெறுகின்றன. இந்த மெய்ஞ்ஞானத்தைப் பெறும் வரையில் மனிதன் அமைதி அடைய முடியாது என வேதங்கள் பகர்கின்றன. ரிஷிகள் சுவானுபூதியில் கண்டறிந்தவைகளை யாவரும் பெறவேண்டுமென விரும்புகின்றனர். அவர்கள் செந்நெறியில் செல்கிறவர்கள். அதே அனுபவத்தை நாமும் பெற்றாக வேண்டும். உண்மை யாவருக்கும் ஒன்றே.

மானுட நிலையிலிருந்து தேவநிலை எய்துவதற்கு ஒரு லட்சம் ஆண்டுகள் எடுத்துக் கொள்ளலாம். தேவகணங்களில் மேலான நிலையை அடைய ஐந்துலட்சம் வருடங்கள் எடுக்கலாம். பின்பு அவன் பரிபூரண நிலையை அடைய ஐந்து கோடி வருடங்கள் எடுக்கலாம். ஆனால் அவன் தனது பரிபூரணத்தை விரைந்து நிறைவேற்றுவானாகில் கால அளவைக் குறைத்துவிட முடியும். தக்க முயற்சி எடுத்துக் கொண்டால் அதே பரிபூரண நிலையை ஆறு மாதங்களிலோ ஆறு வருடங்களிலோ ஏன் எய்திவிடலாகாது. உலகிலே மதாசிரியர்களும், தீர்க்கதரிசிகளும் பலர் தோன்றியுள்ளனர். அன்னவர் அனைவரும் மனிதன் பலகோடிவருடம் வாழ்ந்த வாழ்க்கையை ஒரே ஜீவிதத்தில் வாழ்ந்து நிறைவுபெற்றுள்ளனர். மனதை ஒருமுகப்படுத்துதல் என்பதன் பொருளே காலத்தைக் குறுக்குதலாம். இப்படிச் செய்வதால் மேலோர் காலத்தை வெல்கின்றனர்.

மனதற்ற நிலை எய்ய முதலில் மனது முற்றிலும் வசப்பட்டதாக வேண்டும். ஒடுங்கிய விருத்திகள் மறைந்திருக்கும் சம்ஸ்காரங்களாக சித்தத்தினுள் புதைந்து கிடக்கின்றன. இப்படி மறைந்திருக்கும் விருத்திகளை விதைகள் என்கிறோம். பூமியில் மறைந்து கிடக்கும் விதைகள் தருணம் வாய்க்கும்போது முளைக்கின்றன. வறுத்தெடுத்த விதைகள் முளைக்கமாட்டா. மனதினுள் புதையுண்டு கிடக்கும் விருத்திகள் என்னும் விதைகளும் இருக்கும்வரை ஜனன மரணங்கள் வந்து கொண்டேயிருக்கும்.

ஆத்மாவானது பிரகிருதியோடும் மனதோடும் ஸ்தூல சரீரத்தோடும் கலந்து கிடப்பதால் ஆத்ம தரிசனம் கிட்டுவதில்லை. சித்தம் என்னும் தடாகத்திலே ஏதேனும் ஒரு விருத்தி பாக்கியிருந்தாலும் ஆத்ம சொரூபத்தை தெரியவொட்டாது மறைக்கிறது. விருத்திகள் அனைத்தும் ஒடுங்கும் முன்பு ஆத்ம சொரூபம் தெரிவதில்லை. ஏதேனும் ஒரு விருத்தி அல்லது சங்கற்பத்தை பலப்படுத்துவதால் ஏனைய விருத்திகள் அடிபட்டுப் போகின்றன. பிறகு அந்த ஒன்றையும் அடக்குவது எளிதாகிறது.

உலகில் மக்கள் மடிந்து கொண்டேயிருக்கின்றனர். ஆனால் நாம் மட்டும் மடிந்து போகமாட்டோம் என ஒவ்வொருவரும் எண்ணி வருவது பெரிய அதிசயம். அறிவிலிகளால் சூழப்பட்டவர்களாகவே நாம் இருந்து வருகிறோம். ஆனால் நம்மில் ஒவ்வொருவரும் அறிவு மிகப் படைத்தவர்களாக எண்ணிக் கொள்ளுகிறோம். நிலைத்த அன்பும், உறுதிப்பாடும் யாரிடத்திலும் இல்லை என்பதை எங்கு திரும்பினாலும் கண்டு வருகிறோம். ஆனால் நாம் கொண்டுள்ள அன்பு உறுதியானதென்றும் நிலைத்தது என்றும் எண்ணி வருகிறோம். அன்பு உண்மையில் நிலைத்ததா? இல்லை. அன்பும் சுயநலத்தை அடிப்படையாகக் கொண்டது. கணவன் மனைவியை நேசிப்பதும், மனைவி கணவனை நேசிப்பதும், பெற்றோர் குழந்தைகளை நேசிப்பதும் சிறிது சிறிதாகத் தேய்ந்து இறுதியில் மறைந்து போகிறது. இதைக் கண்கூடாகக் காண்கிறோம். இவ்வுலக வாழ்க்கையிலுள்ள ஒவ்வொன்றும் தேய்ந்து மறையக் கூடியது. இது மனிதருக்கு எளிதில் விளங்குவதில்லை. தான் பற்றிப் பிடித்திருக்கும் யாவும் கைநழுவிப் போகும் பொழுது மனிதனுக்கு திடீரென விவேகம் உதயமாகிறது. இவ்வுலகத்தில் யாவும் பொருளற்றவைகள் என்றும். வெறும் கனவு போன்றவை என்றும் விவேகம் வரும்போது அவனுக்கு விளங்குகிறது அதைத் தொடர்ந்து வைராக்கியம் அல்லது பற்றின்மை சிறிது உண்டாகிறது உலகில் பெருமக்கள் பலர் இருந்துள்ளனர். இந்திரிய சுகங்களையும் அனுபவங்களையும் துறக்காது அவர்களுக்கு பெருமை

வாய்த்தது கிடையாது. இயற்கையில் வெவ்வேறு இயக்கங் களுக்கிடையில் முரண்பாடு உண்டாகிறது.

சத்தியத்தில் நிலைத்திருப்பவன் சொப்பனத்திலும் பொய்சொல் லான். மனம், மொழி, மெய் ஆகியவைகளும் உண்மைக்கு ஒத் தவைகளாகும். அப்படிச் சத்தியத்தில் நிலைபெற்றவன் சொல்லு வது சத்தியமாய் அமையும். ஆசீர்வதிக்கப்படுவாயாக என்று அவன் பகருவது அடையப் பெறுவதாகிறது. நோயாளியின் நோயும் விரைவில் குணமடைகிறது. பிறரிடமிருந்து கொடையை ஏற்றுக்கொள்ளும் பொழுது பிறருடைய தீமைகளையும் ஏற்றுக் கொள்ளுகிறான், ஏலாதிருந்து பழகுவதால் மனது பூர்வ சென்ம ஞாபகத்தைப் பெறுகிறது.

எங்கெல்லாம் உயிர் இயங்குகிறதோ அங்கு அகண்ட சக்தி ஆதாரமாய் உள்ளது. உயிரானது ஓர் அற்பக் காளானாக வாழ் வைத் துவங்குகிறது. பின்பு வாழ்வுக்குரிய வலுவை ஏற்று வரு கிறது. மிக மெதுவாகவும் ஓய்வின்றியும் அக்காளான் தன் வடி வத்தை மாற்றியமைத்து வருகிறது. நெடுநாளின் பின் செடியாகப் பரிணமிக்கிறது. பிறகு விலங்காகப் பரிணமிக்கிறது. அதன் பிறகு மனிதனாக மாறியமைகிறது. இறுதியில் பரம்பொருளில் ஒன்றித்து விடுகிறது.

உலகிலே மதாசிரியர்கள் தீர்க்கதரிசிகள் மானுட வர்க்கம் பல கோடி வருடங்களில் வாழும் வாழ்க்கையை ஓரே சீவிதத்தில் வாழ்ந்து முடித்துவிட்டனர். கொண்டுள்ள லட்சியத்தைத் தவிர வேறு எதனிடத்தும் தங்கள் மனது பிளவுபட்டுப் போக அவர் கள் இடம் தருவதில்லை. லட்சியத்தில் கண்ணாயிருப்பதால் கல்ப காலத்தில் அடையும் நிலையை கணப்பொழுதில் அடையக்கூடிய வர்களாக ஆகின்றனர். மறுமை என்பது எங்கேயோ எட்டி இருக்கும் உலகம் அன்று. இங்கு நமக்கிடையில் லட்சக்கணக் கான அத்தகைய ஆத்மாக்கள் உலவிக் கொண்டிக்கலாம். மாறு பட்ட சலன நிலையில் இருப்பதால் அவர்களை நாம் காண

முடியாது. பிராணன் நம்மிடத்து ஒரு விதத்தில் சலனமாய் கொண்டிருக்கிறது. இதே வித் சலனமாய்க் கொண்டிருக்கிற உயிர்கள் ஒன்றை ஒன்று பார்க்கவும் தொடர்பு வைக்கவும் முடியும். ஆனால் பிராணனுடைய சலனம் உயர்ந்த நிலைக்கு வேறு சில உயிர்களிடம் அமைந்து விடுமாயின் அவைகளை நாம் காண முடியாது. அவை எம்மைக் காணமாட்டா. பிராண சலனம் மாறுபட்ட உயிர்களுக்கிடையில் எந்தவித தொடர்பும் உண்டா வதில்லை.

மிகைப்பட்ட சலனத்தோடு கூடிய வெளிச்சத்தை நம் கண் பார்க்க இயலாது. சலனம் குறைந்ததாகிலும் நம் கண்ணில் தெரிவதில்லை. அப்படிக் குறைந்த சலனத்தை பூனை, ஆந்தை போன்ற உயிர்கள் காணவல்லனவாய் இருக்கின்றன. அழுத்தம் நிறைந்த கடலின் அடிப்பாகத்தில் வாழும் உயிர்கள் மேல்பாகத் துக்கு வருவதில்லை. அப்படி வந்தால் அவை துகள் துகளாக வெடித்துப் போகும்.

ஒவ்வொரு படித்தரத்திலுள்ள சலனங்களை ஒரு ஞானபூமி என்று சொல்லலாம் இப்படி பல ஞானபூமிகள் இருக்கின்றன. ஒரு படித்தர சலனமுள்ளதை ஓர் உலகம் என்றும், இன்னொரு படித்தர சலனமுள்ளதை வேறோர் உலகம் என்றும் பிரித்து வைக்கலாம். ஒரு உலகத்திலுள்ளவர்களின் ஆற்றலை வேறோர் உலக மக்கள் அறிந்து கொள்ள இயலாது. வேறு ஞானபூமிக் குரிய புதிய பிராண சலனத்தை நம்மிடத்து வரவழைத்துக் கொள்ளும் பொழுது அதற்குரிய ஞானபூமியை ஞானதிருஷ்டி யால் பார்க்கும் வல்லமை நமக்கு அமைகிறது. அவ்வுயிர்களுக் கும் நமக்குமுள்ள வித்தியாசம் சலன வேற்றுமையில் மட்டுமே உள்ளது. விரைந்த பிராணசலனத்திற்குரிய உலகம் அவனுக்குக் காட்சி கொடுக்கும். உயர்ந்ததும், விரைந்ததுமான பிராண சலன நிலையை சமாதி நிலை என யோக சாத்திரம் புகட்டுகிறது. சமாதியில் படித்தரங்கள் பலவுண்டு. எல்லாவற்றிலும் உயர்ந்த சமாதி நிலையில் மெய்ப்பொருளை உள்ளவாறு நாம் தரிசிக்கிறோம்.

ஆதிமூலமாகிய பரவஸ்துவை நாம் அறிந்து கொண்டால் அனைத்தையும் அறிந்து கொண்டவர்களாகிறோம்.

மனிதன் ஆத்ம சொரூபமொன்றும்; அதில் பல மகிமைகள் நிறைந்துள்ளன என்று கூறப்படுகிறது. அதேவேளை கர்மத்தின் கொடுமைக்கு உட்பட்டிருக்கிறான். தீவினைகள் ஆத்மாவின் மகிமைகளை மறைக்கின்றன. நல்வினைகள் தடைகளை நீக்குகின்றன.

வேதத்தில் நம்பிக்கை வைக்கின்ற மனிதன் இம்மண்ணுலகின் சிலரேயாம். வேதப் பெயரில் வாழும் சுயநலப் பித்தர்களை ஏராளமாக எக்காலத்திலும் காணலாம். வேதம் இடுகின்ற ஆணைகளுள் மிகப் பெரியது தியாகத்தாலே அமிர்தத்துவம் அடைகிறது என்பதாகும்.

வேதம் ஆகமம் சன்மார்க்கம் ஆகியவைகளின் பிரமாணம் என்று சொல்லிக் கொண்டு தன்சுயநலத்தையே நிலைநாட்டுகிறான் இம்மையில் நலம் அடையாத ஒருவன், உயிர்களுக்கு அன்புகாட்டாத ஒருவன் மறுமையிலும் எந்த மேன்மையும் அடையப் போவதில்லை.

ஒரு பிறப்புத்தான் உண்டு என்பது ஏகசன்ம வாதம். முக்தி அடையும் வரை பல பிறவுகள் உண்டு என்பது புனர்சன்ம வாதம். யூதம், கிறிஸ்தவம், இஸ்லாம் ஏகசன்மவாதம். மற்றைய மதங்கள் பல பிறவி வாதம், ஆண்டவன் ஒரு பிறவியைத்தான் தருகிறார் என்பது யுத்திக்குப் பொருந்தாது. மனிதனை அறிவிலும் ஆற்றலிலும் ஏற்றத்தாழ்வாக ஏன் படைக்க வேண்டும்.

ஆன்மா பக்குவமடைய ஒரு சென்மம் போதாது. பள்ளியில் பாடம் படிக்க பல வகுப்புக்கள் வேண்டும். ஆத்மா பக்குவம் ஆவதற்கு பல ஜென்மங்கள் எடுத்துக் கொள்ளுகிறது. ஒரு சென்மத்தில் அடைந்த பரிபக்குவத்தை ஒட்டி மறு சென்மம் வருகிறது. பழைய பிறவிகளை மறக்கடிப்பதற்கே புதிய பிறவி

கள் வருகின்றன. அவைகளை ஞாபகத்துக்கு கொண்டு வந்தால் பெரும் சுமையாகும். துன்பமும் அதிகரிக்கும். ஆகவே பழைய அனுபவம் மட்டும் மனதில் நின்றுவிடுகிறது. மற்றவை ஞாபகத்திலிருந்து மறைந்து விடுகிறது' ஆகவே ஒரு பிறவி என்பது அர்த்தமற்றது.

இரவு நேரத்தில் ஆகாயத்தில் நட்சத்திரங்களைக் காண்கிறோம். பகலில் அவை தெரிவதில்லை. அதனால் வானில் நட்சத்திரங்கள் இல்லை என்று சொல்லலாமா? அஞ்ஞானத்தினால் உன்னால் இறைவனைக் காண முடியவில்லை என்றால் இதற்காக இறைவனை இல்லை என்று சொல்ல முடியுமா?

— இராமகிருஷ்ண பரமஹம்சர்

★ ★ ★

மகா மந்திரங்கள் மூன்று:

கடவுள் (உண்மை) மேல் அன்பு வைத்திருங்கள்

பாபத்திற்கு அஞ்சுங்கள்.

சமூகத்தில் நல்லொழுக்கத்தைக் கடைப்பிடியுங்கள்.

— சாயிபாபா

# விநாயகர் தரும நிதியம்

புலோலி மேற்கு, பருத்தித்துறை

விநாயகர் = பிள்ளையார், அறிவுப்பொருள், ஊ. எண்களில் 3 கிரகங்களில் வியாழபகவான், மனித அவயத்தில் வலக்கண் இவைகளைக் குறிக்கும்.

ஞாபகார்த்த நிதி = திரு. சி. ஆ. சிவக்கொழுந்து
திருமதி. ஆ. சி இராசம்மா
(வ. க. கோ. சரவணமுத்துவின் மகள்)
செல்வன் ஆ. சி. மு. சுப்பிரமணியன்

நோக்கம் — அறிவு வளர்ச்சிப் பணி,
ஊனமுற்றோர் உதவிப்பணி,
கரும யோகப்பணி.

தர்மகர்த்தா சபை

திரு. சி. முருகேசபிள்ளை
நிறுவனர், நிர்வாகி. ஆயுட்காலத் தலைவர்.
திரு. வ. கு. கணபதிப்பிள்ளை
B. A (Lond) சட்டத்தரணி, உபதலைவர்.
வ. ச. செல்வராசா
செயலாளர் — பொருளாளர்
திரு. க. தங்கராசா
நிர்வாகப் பொறுப்பதிகாரி

கௌரவ உறுப்பினர்கள்:

திரு. அ. துரைலிங்கம்
திரு. சு. வேதாரணியம்
திருமதி. கோ. கண்மணி

கௌரவ உப உறுப்பினர்கள்:

திரு. வி. க. கேதீஸ்வரநாதன்
திரு. ஆ. அ. சிவப்பிரகாசம்